விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

அழகிய ஆரம்பம்...

இன்று

இதழ்

23 பிப்ரவரி 2025 - 6-ம் இதழ்





விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

அழகிய ஆரம்பம்...

இன்று

ஈ இதழ்

23 பிப்ரவரி 2025 - 6-ம் இதழ்

முத்தான 10 பக்கங்கள்

அனைவருக்கும் வணக்கம்.

இன்று-வின் வாசகர்களுக்கு
வாழ்த்துக்கள்.

ஒரு செயலை தொடர்ந்து
செய்துவரும் போது அதில்
கிடைக்கும் சுகமே அலாதி தான்...

அப்படித்தான் இந்த இதழை
நடத்துவதும் உள்ளது.

வாராவாரம் ஞாயிறுகள்
சீக்கிரமாக வந்து விடுகிறது...

ஒரு இதழ் முடிந்து விட்டது
என்று சந்தோசப்பட்டால்
அடுத்த வாரம் வந்துவிடுகிறது...

இருப்பினும் புதிய புதிய விசயங்கள்
இதழுக்கு கிடைத்தவண்ணம்
உள்ளது...

நமது படைப்பாளர்கள் தங்கள்
படைப்புகளை மின்னல் வேகத்தில்
உடனுக்குடன் அனுப்பிவருவது
மிகுந்த சந்தோசத்தைத் தருகிறது.
அவர்களுக்கு மிகவும் நன்றிகள்...

படைப்பாளர்கள்,
படிப்பவர்கள்
அனைவருக்கும் நன்றி...

ர.ஸ்ரீஹரி, ஆசிரியர்

இன்று ஈ இதழ்

29 – சக்தி நகர், ஆதம்பாக்கம் சென்னை
செல் 70940 53241 e.mail : indhrumail@gmail.com

ஒன்று சொல்... நன்று சொல்...

போட்டித்தேர்வு குறிப்புகள்

எதிர்ச்சொல்

1.அகநகர் X புறநகர்
2.அகப்பகை X புறப்பகை
3.அகம் X புறம்
4.அகலல் X கிட்டுதல்
5.அங்கு X இங்கு
6.அசல் X நகல்
7.அடக்கம் X அடங்காமை
8.அடி X முடி
9.அடைப்பு X திறப்பு
10.அண்மை X சேய்மை
11.அருள் X மருள்
12.அமைதி X குழப்பம்
13.அலர்தல் X குவிதல்
14. அவ்விடம் X இவ்விடம்
15. அறம் X மறம்.





புத்திசாலி மாலுமிக்கு
புயல் ஒரு பொருட்டல்ல...

கவிதை




முத்து ஆனந்த் வேலூர்

உன் மௌனம்
கலைந்து
அமைதியை
ரத்து செய்த வினாடியில்
என் காதல்
ஹோலி கொண்டாடத்
தொடங்கியது!

கோபம் வந்து விட்டால்
எண்ணெயில் போட்ட
கடுகாய்ப் பொரிகிறாய்!
காதல் வந்து விட்டால்
என்னையே எண்ணையாக்கி
நீ மிதக்கிறாய்!

நீ மட்டும்
எப்பொழுதும்
புத்துணர்ச்சியுடன் பளிச்சென்று
இருக்கிறாயே!
நீ மட்டும் என்ன?!
சனி நீராடுவதற்குப் பதிலாக
பனி நீராடுகிறாயா?!



ஒருவனை அவனது
நண்பனைக் கொண்டு அறியலாம்...

கவிதை



குடந்தை பரிபூரணன்.

குறுஞ்செய்தி கூறாயோ!!

கண்ணுறங்கும் போது
காலை வாழ்த்தினையும்
மண்புலரும் போது
மாலை வாழ்த்தினையும்
குறுந்செய்தி அனுப்புகிறேன்
கூறுவாய் பதில் என்று
இருந்தேங்கி வாடுகிறேன்
இங்கே!!



அவசர உதவி எண்கள்

1. காவல்துறை உதவி - 100
2. தீயணைப்புத்துறை உதவி - 101
3. ஆம்புலன்ஸ் உதவி - 102 & 108
4. பெண்கள் பாதுகாப்பு - 181 & 1091
5. குழந்தைகள் பாதுகாப்பு - 1098
6. பேரிடர் கால உதவி - 1077
7. சைபர் குற்றங்கள் தடுப்பு - 1930
8. பள்ளி கல்வித்துறை உதவி - 14417

ஈடுபாட்டுடன் செய்யும் வேலை
வெகு சிறப்பாக முடியும்...

வீட்டுக்குறிப்புகள்



நடேஷ் கன்னா,
கல்லிடைக்குறிச்சி
செல் 9944284135

வீட்டு குறிப்புகள்

1. முட்டை வேக வைக்கும் போது அதில் ஐந்து சொட்டு கடலை எண்ணெய் சேர்த்தால் முட்டை ஓடு எளிதாக பிரிக்க முடியும்

2. கையில் சிறிது எண்ணெய் தடவி மீனை சுத்தம் செய்தால் கைகளில் மீன் நாற்றம் அடிக்காது.

3. பொங்கல் செய்யும் போது தண்ணீர் அதிகமாகி விட்டால் சிறிது ரவையை சேர்த்து கிண்டினால் கெட்டியாகிவிடும்

4. வடை அடை தோசை செய்யும் போது. சிறிது ஜவ்வரிசி மாவையும் சேர்த்தால் வடை அடை தோசை மொறு மொறு என்று இருக்கும்

5. பிளாஸ்கில் சிறிது எலுமிச்சை தோலை போட்டு வெந்நீர் விட்டு கழுவினால் துர்நாற்றம் வீசாது

குறைந்த செலவில்
உங்கள்
விளம்பரம் வெளியாக
அழைக்கவும்...
7094053241

முயற்சியை கைவிடாதே
வெற்றி சிறிது தூரத்தில்...

மினிகதை



மலர்மதி

உண்ணா விரதம்

”நமது கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்கவில்லை. அதனால உண்ணாவிரதம் வைத்து ஊடகங்கள் வாயிலாக அரசின்கவனத்தை ஈர்க்க வேண்டும் தலைவரே” என்று உசுப்பேற்றினார் பாஷாபாய். அவருடைய யோசனையை ஏற்று உண்ணாவிரதத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. உண்ணாவிரதத்துக்கு பிரியாணி சப்ளை செய்யும் ஆர்டர் தனக்குக் கிடைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார் பிரியாணி கடை ஓனர் பாஷாபாய்.

பொது அறிவு தகவல்கள் !!!

- எறும்புகளுக்கு காதுகள் மற்றும் நுரையீரல் கிடையாது .
- புதிதாய் பிறந்த குழந்தைகள் முதன் முதலில் பார்க்கும் நிறம் சிவப்பு .
- கண் இமைகள் கொண்ட ஒரே மீன் இனம் - சுறா மீன் .
- உள்ளங்காலில் முடி இருக்கும் ஒரே பாலூட்டி விலங்கு - துருவ கரடி .
- இந்த உலகம் முழுவதும் கிட்டத்தட்ட 7,500 வகையான ஆப்பிள் வகைகள் உள்ளன .
- நத்தைகளின் கண்கள் அதன் கொம்புகளின் மேல் உள்ளது .

- முத்து ஆனந்த், வேலூர்

சுறுசுறுப்பில் தேனீயைப் போல் இருக்கவேண்டும்...

மைக்ரோ கதை



-சு.மூன்சுதாகரன்,
வானவன்மகாதேவி.


பெருக்கல்...

அழைப்பிதழை வாங்கிப் படித்த
ரகுராமனுக்கு ஒன்றும் புரியவில்லை
விழா தலைமை அவர் பெயர்
போடப்பட்டிருந்தது...

”சார்... நான் தான்”
உங்க எட்டாம் வகுப்பு மாணவன்
சுகுமார்...கூட்டல் கணக்கு சரியா
போட தெரியலைன்னு பத்து மாடு
வாங்கி மேய்க்கச் சொன்னீங்களே...

”அதான் பத்து மாட்டை
நூறு மாடா பெருக்கிட்டேன்”
பால் பண்ணை திறப்பு விழாவுக்கும்
எனது உயர்வுக்கும்
“தலைமை“ ஆசிரியரே
நீங்கள் தான் என்றான்...

Vikas Basic Grammar Class



Master your Grammar and write with confidence

COURSE HIGHLIGHTS:

. Understanding Grammar rules
.Perfect your sentence structure
.Preparing for your exam

vikasclasses.2023@outlook.com
Call @9962201523

COURSE SESSION:

- Every Monday, Wednesday and Friday
- Timing:6.30 pm to 7.30 pm

மிகவும் விரயமாக்கப்பட்ட நாள்
சிரிக்காத நாள் மட்டுமே...



இன்று
இந்த இதழிலிருந்து
ஆரம்பம் என்று
"இன்று"
இதழில்
அறிவிப்பு வெளியிட்டிருந்தார்கள்
எனக்கென்னவோ
அதை நீ
என்னிடம் சொல்வது போலவே
இருந்தது...



முத்து ஆனந்த்
வேலூர்.

"இன்று" தன் பக்கங்களை
இரட்டிப்பாக்கியதிலிருந்தே தெரிகிறது
அதன் வளர்ச்சி. இதழ் மேன்மேலும்
வளர வாழ்த்துகிறேன்.



- மலர்மதி

இன்று என்றும்
போல் சிறப்பு...



ஜி.எஸ்.எம்,
முசிறி

மற்றும் அலைபேசியில் வாழ்த்து
தெரிவித்த அனைத்து நல்
உள்ளங்களுக்கும்
நன்றி... நன்றி...

இன்று குழுமம்



பிறர் மனம் புண்படாத பேச்சு
தலை சிறந்த தவம்...

இ பதிப்பகம்
இன்று
ஈ இதழ்

ஹை....கூ... கவிதை...



சு.அருண் பிரகாஷ்
இராமச்சந்திரபுரம்.

படரக் கொம்பின்றி
துவண்டது கொடி
மின்னல்...

மழை பறித்தல்

மேகவனத்தில்
மழை பறிக்கின்றன...
குளிர்காற்றை வீசியெறிந்து
மரங்கள்...

மழலை உருவில்
பூமி வந்த கடவுள்
ஒப்பனை களைந்து
மீண்டும் கடவுளாகவே
மேடையேறுகிறார்
பள்ளி மாறுவேடப் போட்டியில்...

நீங்கள் நடத்தும் வாட்சப் குழுக்களில்
இன்று எண்ணையும் இணையுங்கள்
எண் : 7094053241

நேரம்

தினமும் காலை அரை மணி
நேரம் மாலை அரை மணி நேரம்
புத்தகம் படிக்கும்
பழக்கத்தை மேற்கொண்டால்
ஒரு மாத முடிவில் ஒரு நாள் +
6 மணிநேரம் (30 மணி நேரம்)
படித்திருப்பீர்கள்...

ஆக்கம் - தி.ரேவதி



கதைகளில், கவிதைகளில் வரும் அம்சங்கள்
கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...

இன்று ஈ பதிப்பு - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம்,
சென்னை வெளியிடுபவர், ஆசிரியர். ர.ஸ்ரீஹரி
செல் 7094053241 indhrumail@gmail.com